


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 84 - ஒலி : 29 - திருவள்ளுவர் ஆண்டு 2056 - ஆவணி 23 - திங்கள்கிழமை 08 செப்டம்பர் 2025 - சென்னை 12 + 12 பக்கங்கள்

Established: 10.8.1942 - Volume: 84 - Issue 29: Thiruvalluvar Year - 2056 - Aavani 23 - Monday 08 September 2025 - Chennai 12 + 12 Pages ₹ 5.00


## நாம் நம் அடையாளத்தை மறக்காமல் - வாழ்வதும் வளர்வதும்

# தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும்!

## இலண்டன் மாநகரில் நடந்த தமிழ்க்கனவு - இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**இலண்டன், மார்ச் 8-**

**“நாம் நம் அடையாளத்தை மறக்காமல் வாழ்வதும் வளர்வதும் தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும்” என்று இலண்டன் மாநகரில் நடைபெற்ற தமிழ்க்கனவு - இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.9.2025 அன்று இலண்டன் மாநகரத்தில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு - இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை வருமாறு:-

உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே! ஒடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புது நிலவே! அன்பே! அமுதே! அழகே! உயிரே! இன்பமே! இனிய தென்றலே! பனியே! கனியே! பழரசச் சுவையே! மரகத மணியே! மாணிக்கச் சுடரே! மன்பதை விளக்கே! என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும், தமிழை “தமிழே” என்று அழைப்பது தான் நமக்கு இருக்கக்கூடிய சிறப்பு.

### அயலக மண்ணில் தமிழின் அடையாளங்கள்!

அப்படிப்பட்ட தமிழின் அடையாளமாக இந்த அயலக மண்ணில் வாழக்கூடிய உங்களையெல்லாம் பார்க்கும் போது, பேசலாமா! அல்லது பேசாமல் உங்கள் முகத்தையே பார்த்துக் கொண்டு இருக்கலாமா! அந்த எண்ணம்தான் என்னுடைய உள்ளத்தில் தோன்றிக் கொண்டிருக்கிறது!

இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்திருக்கின்ற உங்கள் எல்லோரையும் பார்க்கின்றபோது எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது!

ஏனென்றால், இந்தப் பயணத்தில் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக் கழகத்தில் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்தேன். அப்போது நான் நினைத்துப் பார்த்தேன்...

ஏராளமான தமிழர்களை இந்த ஐரோப்பிய பயணத்தில் சந்தித்தேன். ஒவ்வொருவரும் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளும்போது, தமிழ்நாட்டில் தங்களுடைய ஊர் பெயரைச் சொல்லி, இப்போது ஐரோப்பாவில் இந்த நாட்டில் இந்த பொசிஷனில் நான் இருக்கிறேன் என்று அறிமுகம் செய்து கொண்டார்கள்.

### தமிழ்நாடு முதல்வராக நான் பெருமைப்படுகிறேன்!

மிக மிக எளிய பின்புலங்களில் இருந்து, படித்து முன்னேறி, இந்த இடத்திற்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் இங்கே சுயமரியாதையுடன், மதிப்பு மிக்க இடத்தில் இருப்பதைப் பார்த்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

அந்தப் பெருமையோடுதான்,



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.9.2025 அன்று இலண்டன் மாநகரில் நடைபெற்ற மாபெரும் தமிழ்க் கனவு – இங்கிலாந்து வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அயலக தமிழர் நல வாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, அயலக தமிழர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் ஜி.வி. ராம், புகழ் காந்தி, முகமது பைசல், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா வாழ் தமிழ் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெஞ்சம் குளிர, உணர்ச்சிப்பெருக்கை கட்டுப்படுத்த முடியாமல் கண்கள் கலங்க தந்தை பெரியார் படத்தை நான் திறந்து வைத்தேன்!

தமிழர்கள் அறிவில் சிறந்தவர்கள், கடுமையான உழைப்பாளிகள் என்று நீங்கள் எல்லோரும் இந்த அயலக மண்ணில் நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

என்னுடைய இந்தப் பயணத்தின் நிறைவாக உங்களை எல்லாம் இங்கே நான் சந்திக்க வந்திருக்கிறேன்.

### திராவிடத்தால் வாழும் தமிழர்களைப் பார்க்கிறேன்!

தமிழர்கள் எங்கே சென்றாலும் நம்முடைய மொழி, பண்பாட்டை விடமாட்டோம். அது மட்டுமல்ல, சுயமரியாதை, சமத்துவ எண்ணம், சமூகநீதி கோட்பாட்டையும் விடமாட்டோம். அதற்கு எடுத்துக் காட்டாக, இங்கே தமிழர்கள் இருப்பதை கடந்த சில நாட்களாக கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். திராவிடத்தால் வாழ்கிறோம் என்ற பெருமிதத்துடன் சொல்கின்ற தமிழர்களைப் பார்க்கிறேன்.

சிறந்த உட்கட்டமைப்பு, திறமையான இளைஞர்கள், அமைதியான சூழல், இதனால்தான், தமிழ்நாட்டில் முதலீடுகள் குவிகின்றது. தமிழ்நாட்டின் பெருமையை எடுத்துச் சொல்லுகின்ற தூதர்களாக இங்கே இருக்கின்ற உங்களை எல்லாம் நான் பார்க்கின்றேன்.

உங்களை பார்க்கும்போதே, இங்கே இருக்கின்றவர்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டைப் பற்றி ஒரு நல்ல எண்ணம் வரும். அந்த வகையில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கின்ற நீங்கள் எல்லோரும் தமிழ்நாட்டின் Unofficial Ambassadors!

நீங்கள் தமிழ்நாட்டில் இல்லையென்றாலும், உங்கள் ஒவ்வொருக்குள்ளேயும் தமிழ்நாடு இரண்டறக் கலந்திருக்கிறது. அதை உங்கள் உணர்வுகளில் பார்க்கின்றபோது உள்ளபடியே மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது!

### தமிழுக்கு தீங்கு நினைக்கும் எண்ணம் நிறைவேறாது!

அதிலும் நீங்கள் நிறைய குழந்தைகளுக்கு இனிமையான, அழகான தமிழ்ப் பெயர்களை வைத்திருக்கிறீர்கள். அவர்களுக்குள்ளேயும் தமிழுணர்வை ஊட்டிக் கொண்டு வருகிறீர்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, தமிழுக்குத் தீங்கு நினைக்கும் யாருடைய எண்ணமும், ஒருபோதும் நிறைவேறாது என்ற எண்ணம் வலுப்பெறுகிறது!

இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து பேசுவதைவிட, உங்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனியாக பேச வேண்டும்; உங்கள் வீடுகளுக்கு ஒரு அண்ணனாக வந்து தங்கவேண்டும் என்று நினைக்கிறேன். ஆனால், அதற்கான போதிய நேரம் இல்லை என்பதால் தான், இப்படிப்பட்ட நிகழ்ச்சியை நடத்தி அதன் மூலமாக உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பு, எனக்கு என்று சொல்வதைவிட, நமக்கு கிடைத்திருக்கிறது.

இதை முறையாக பயன்படுத்தி பொருளாதாரத்தில் முன்னேறுவதோடு, பண்பாட்டிலும். பகுத்தறிவிலும் அடுத்த கட்டத்திற்கு நீங்கள் முன்னேறிக் கொண்டு செல்லவேண்டும்.

நம்முடைய தமிழ்க்குழந்தைகளுக்கு உயர்தரப் படிப்பை வழங்குங்கள். அவர்களுடைய திறமையை வெளிப்படுத்துகின்ற வாய்ப்புகளை உருவாக்கி நீங்கள் தாருங்கள். அடுத்த தலைமுறை தமிழர்கள், நம்மைவிட அதிக உயரத்தில் இருக்க வேண்டும். அதே சமயம் சக தமிழர்களையும் வளர்த்து விடவேண்டும்.

உங்களுடைய பரபரப்பான வாழ்க்கையை கடந்து, ஆண்டிற்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டிற்கு வாருங்கள். உங்களால் முடிந்ததை தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்யுங்கள். இங்கே இருக்கின்ற வேலைவாய்ப்புகளைப் பற்றி, தமிழ்நாட்டில் இருக்கின்ற நம்முடைய இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். அவர்களுக்கும் உலக கதவுகளை திறந்துவிடுங்கள்.

### தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு உதவக் கதவுகளை திறந்து விடுங்கள்!

தமிழர்களின் வரலாற்றை, பண்பாட்டை வெளிக்காட்ட கீழடியைத் தொடர்ந்து, பொருநை அருங்காட்சியகம், கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் என்று அமைத்துக் கொண்டு வருகிறோம். நம்முடைய குழந்தைகளுக்கு அதையெல்லாம் சுற்றி காண்பித்து, நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள்.

பழம்பெருமையை மட்டும் எடுத்துச் சொல்லாமல், நாம் எவ்வளவு வலிகளையும், வேதனைகளையும் கடந்து இன்றைக்கு தலை நிமிர்ந்திருக்கிறோம் என்பதையும் சொல்லித் தாருங்கள்.

இதையெல்லாம் நான் சொல்லக் காரணம், எப்போதும் தமிழர்களுக்குள்ளே ஒற்றுமை நிலவவேண்டும். இந்த இனம் எப்போதும் முன்னேற்றப் பாதையில் மட்டும்தான் பயணிக்கவேண்டும்! அதற்காகத்தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், தமிழ்நாட்டில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### அயலகத் தமிழர்களுக்கு ஏராளமானத் திட்டங்கள்!

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கின்ற நாங்களும் உங்களை அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனால் தான், நம்முடைய திராவிட மாடல் அரசில், அயலகத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக ஏராளமான திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ஜெர்மனி, இலண்டன் பயணத்தில் அன்பு பொழிந்த உள்ளங்களின்

# எண்ணிலடங்கா நினைவுகளுடன் தாயகம் திரும்புகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**இலண்டன், செப்.8-**

**ஜெர்மனி, இலண்டன் பயணத்தின்போது சந்தித்த தமிழர்களின் எண்ணிலடங்கா நினைவுகளுடன் தாயகம் திரும்புகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டார்.**

ஜெர்மனியில் தமிழர்கள் அளித்த உற்சாக வரவேற்புடன் தொடங்கிய TN Rising பயணம், இலண்டன் மாநகரில் அவர்கள் வாழ்த்தி வழியனுப்ப நிறைவடைந்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

ஜெர்மனியில் தமிழர்கள் அளித்த உற்சாக வரவேற்புடன் தொடங்கிய TN Rising பயணம், இலண்டன் மாநகரில், அவர்கள் வாழ்த்தி வழியனுப்ப நிறைவுறுகிறது!

அளவில்லா அன்பு பொழிந்த உள்ளங்களின் எண்ணிலடங்கா நினைவுகளுடன் தாயகம் திரும்புகிறேன்.

இத்தனை நாளும் தங்கள் சகோதரனாய் என்னை கவனித்துக்கொண்ட புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்திற்கு என் அன்பை நன்றியாய் நவில்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.